எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு : ஒன்றிய அரசையும் அதற்கு துணை போகும் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

# தமிழ்நாடு முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள் – அமைச்சர்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கானோர் திரண்டனர்!

சென்னை, மார்ச் 15 -

**தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை; அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை! தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் NDAஅரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் நேற்று (15.3.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணிக்கு மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற்றது!**

இதில் லட்சக்கணக்கானோர் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்.

ஒன்றிய பா.ஜ.க. NDA அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையினாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததன் விளைவாகவும் இன்று நாடு முழுவதும் சமையல் கேஸ் சிலிண்டருக்கும் - வணிக ரீதி யிலான கேஸ் சிலிண்டருக்கும் தட்டுபாடு ஏற்பட்டு மக்கள் அவதியுற்று வருகின்றனர்.

உணவகங்கள், வணிக நிறுவனங்கள் சரிவர இயங்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. சிறுகுறு தொழில்கள் உள்ள அதிக தொழில்வளமிக்க தமிழ்நாடு இந்த கடுமையான பாதிப்பை சந்திக்கும் என்பதால் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து நிலைமையை சரிசெய்ய வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் வாயிலாக வலி யுறுத்தி இருந்தார். ஆனால் தற்போது வரை மக்களிடையே நிலவும் அச்சத்தைப் போக்கி நிலைமையை சீராக்க முறையான நடவடிக்கை எடுக்கவில்லை ஒன்றிய NDA அரசு. நாடாளுமன்றத்தில் இதைப்பற்றி பேசவே பிரதமர் மறுத்து வருவது கண்டனத்திற்குரியது.

அதோடு தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி, நூறு நாள் வேலை திட்ட நிதி, குடிநீர் இணைப்பு நிதி என எந்த நிதியையும் ஒதுக்காமல் நிறுத்தி வைத்திருப்பது. கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம், ஓசூர் விமான நிலையம் என எந்தவொரு வளர்ச்சித் திட்டத்திற்கும் அனுமதி தராமல் முட்டுக்கட்டை போட்டு வருவது. மும்மொழி திணிப்பு என்ற பெயரில் தமிழ்மொழியை அழிக்க துடிப்பது, கீழடி அகழ்வாய்வு முடிவுகளை ஏற்க மறுப்பது என தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

இப்படி தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து நேற்று (மார்ச் 15ஆம் தேதி - ஞாயிற்றுக்கிழமை), காலை 10.30 மணி யளவில், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் ‘மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி’ சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற்றது.

### கூட்டணிக் கட்சித் தலைவர்கள் முழக்கம்!

மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சி களின் சார்பில் நடைபெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், தஞ்சாவூர் - திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்களும், சென்னை கிழக்கு - கு.செல்வபெருந்தகை (காங்கிரஸ்), மதுரை - வைகோ (ம.தி.மு.க), காஞ்சிபுரம் - பெ.சண்முகம் (சி.பி.எம்.) பெரம்பூர் - சென்னை வடக்கு - மு.வீரபாண்டியன் (சி.பி.ஐ.), சென்னை மேற்கு - அபுபக்கர் (இ.யூ.மு.லீக்), சென்னை தெற்கு - தொல்.திருமாவளவன் (வி.சி.க), சென்னை தென்மேற்கு - அருணாசலம் (ம.நீ.ம), சென்னை மேற்கு - எம்.எச்.ஜவாஹிருல்லா (ம.ம.க), கோவை - ஈ.ஆர்.ஈஸ்வரன் (கொ.ம.தே.க.), சென்னை மேற்கு - எல்.கே.சுதீஷ் (தே.மு.தி.க), சென்னை தெற்கு - தி.வேல்முருகன் (த.வா.க), சிதம்பரம் - ஜி.எம்.ஸ்ரீதர் வாண்டையார் (மூ.மு.க.), சென்னை மேற்கு - தமிமூன் அன்சாரி (ம.ஜ.க.), திருப்பூர்-உ.தனியரசு(கொ.இ.பே.), சென்னை வடகிழக்கு - திருவொற்றியூர்- முபாரக் (எஸ்.டி.பி.ஐ.), விருதுநகர்- கருணாஸ் (மு.பு.ப), கரூர் - ஜக்கையன் (ஆதித்தமிழர் கட்சி), கோவை - நாகை திருவள்ளுவன் (தமிழ்புலிகள் கட்சி), திருச்செங்கோடு -அதியமான் (ஆதித் தமிழர் பேரவை), திருச்சி - கே.கே.செல்வகுமார் (தமிழர் தேசம் கட்சி), ஈரோடு - கே.எஸ்.ராஜ்குமார் (புதிய திராவிட கழகம்), கோவை - வெண்மணி (திராவிடர் தமிழர் பேரவை),

### அமைச்சர்கள் பங்கேற்பு!

திருச்சி - முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, திண்டுக்கல் - துணைப் பொதுச்செயலாளர் - ஐ.பெரியசாமி, திருவண்ணாமலை - எ.வ.வேலு, கடலூர் - எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், சாத்தூர் - கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன். விருதுநகர் - தங்கம் தென்னரசு, புதுக்கோட்டை- எஸ்.ரகுபதி - ஈரோடு - சு.முத்துசாமி. சிவகங்கை - கே.ஆர்.பெரிய கருப்பன், செங்கல்பட்டு - தா. மோ.அன்பரசன், திருப்பூர் - மு.பெ.சாமிநாதன், தூத்துக்குடி - கீதாஜீவன், திருச்செந்தூர் - அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இராமநாதபுரம் - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சேலம் - இரா.இராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் - அர.சக்கரபாணி, இராணிப்பேட்டை - ஆர்.காந்தி, சென்னை தெற்கு - மா.சுப்பிரமணியன், மதுரை - பி.மூர்த்தி, அரியலூர் - எஸ்.எஸ்.சிவசங்கர், சென்னை கிழக்கு - பி.கே.சேகர்பாபு, கும்பகோணம் - கோவி.செழியன், மதுரை மத்திய - பழனிவேல் தியாகராஜன், திருவள்ளூர் - சா.மு. நாசர், பொன்மலை, திருச்சி - அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அறந்தாங்கி - சிவ.வீ.மெய்யநாதன், விருத்தாசலம் - சி.வெ.கணேசன், திருவாரூர் - டி.ஆர்.பி.ராஜா, நாமக்கல் - மா.மதிவேந்தன், கன்னியாகுமரி - த.மனோ தங்கராஜ், தாராபுரம் - என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோரும் பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளின் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த அனைத்து அமைப்புகளின் நிர்வாகிகள் அனைவரும் மற்றும் பொதுமக்கள் லட்சக்கணக்கானோர் திரண்டனர்.

---

## முன்னோடி திட்டங்களை தந்து நாட்டிற்கே வழிகாட்டியாக தமிழ்நாடு திகழ்கிறது!

### பொன்னமராவதியில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

*புதுக்கோட்டை, மார்ச் 16 -*

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே உள்ள நகரப்பட்டியில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகு பதி 100 பயனாளிகளுக்கு வேஷ்டி, சேலை மற்றும் குழந்தைகளுக்கு நோட் புத்தகம் மற்றும் பரிசு பொருட்களை வழங்கினார்.

இதில் திமுக ஒன்றிய செயலாளர்கள் அ.முத்து, அ.அடைக் கலமணி, நகரச் செயலாளர் அ.அழகப்பன், முன்னாள் ஒன்றியச் செயலாளர் ராமச்சந்திரன், மாவட்டப் பிரநிதிகள் சிக்கந்தர, கோவை ராஜன் திமுக நெசவாளர் அணி சுந்தரி ராமையா, விவசாய அணி மாவட்டத் தலைவர் அழகப்பன் அம்பலம் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை நெசவாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சுந்தரி ராமையா செய்திருந்தார் விழாவில்



அமைச்சர் எஸ்.ரகுபதி பேசியதாவது:

திராவிட மாடல் அரசு உ கத்திற்கே வழிகாட்டியாக இருக்கும் என அமைச்சர் எஸ்.ரகுபதி கூறினார், புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே உள்ள நகரப்பட்டியில் வார சந்தையினை தொடங்கி வைத்து எந்தக் காலத்திலும் யாரும் செய்யாத சாதனைகளை கடந்த 5 ஆண்டுகளில் செய்துள்ளோம். திருமயம் தொகுதியில் பொன்னமராவதி பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்தியுள்ளோம் திருமயம் ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்தியுள்ளோம். திருமயம் துளையானூரில் கலை அறிவியல் கல்லூரி கொண்டுவந்துள்ளோம். திருமயம் தொகுதி விவசாயிகளின் நலனுக் காக வேந்தன் பட்டி,குழி பிறை, கடியாபட்டி ஆகிய 3 இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைத்துள்ளோம். பொன்னமராவதியில் நீதிமன்றம், திருமயத்தில் சப்கோர்ட் சாலை, குடிநீர், போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது.

எல்லோருக்கும் எல்லாம் நாம் அனைவரும் சமம். திராவிட மாடல் ஆட்சி என்பது எல்லோருக்கும் அனைத்து வகையான தகுதிகளும் தரப்படும். ஆன்மீக அரசியலில் அனைவரும் சமம். அனைத்து சமுதாயத்தினரும் அர்ச்சக ராகலாம் என்று சொல்வது

தான் ஆன்மீக அரசியல். எனவே ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு சொந்தமாக இருக்கக்கூடிய இந்துத்துவா தத்துவத்தை ஆன்மீக அரசியல் மூலம் அனைத்து சமுதா யத்தினரும் அர்ச்சகராலாம் என்ற நிலைப்பாட்டினை தமிழ்நாட்டில் கொண்டு வந்து பொருளாதார வளர்ச்சி அடைந்துள்ளோம். தமிழ்நாட்டின் எங்கள் ஆட்சியில் பொருளார வளர்ச்சி 11.19 இதனால் திமுக ஆட்சியில் எத்தனை மடங்கு தமிழ்நாடு பொருளார வளர்ச்சியடைந்துள்ளது என்பதனை பொதுமக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த 5ஆண்டுகளாக இந்தியாவிலே நம்பர் ஒன் மாநிலம் என்ற பெயரை பெற்றுள்ளோம். இந்தியா விற்கே வழிகாட்டியாக முன்னோடி திட்டங்களை தந்த மாநிலமாக தமிழ்நாடு இருக்கின்றது. அடுத்து அமைய உள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில் உலகத்திற்கே வழிகாட்டக் கூடிய பல்வேறு திட்டங்களை கொண்டுவந்து சிறப்பாக செயல்படுத்துவோம் என்றார்.

---

### தருமபுரி மாவட்டத்தில் 15.39 கோடியில் முடிவுற்ற 33 திட்டப்பணிகள்

## ரூ.33.96 கோடியில் 421 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் - 28,639 பயனாளிகளுக்கு அரசு நல உதவிகள்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 14–

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் 15.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 33 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 33.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 421 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 28,639 பயனாளிகளுக்கு 254.59 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.3.2026) தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற விழாவில் தருமபுரி மாவட்டத்தில் 15.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 33 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 33.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 421 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 28,639 பயனாளிகளுக்கு 254.59 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பொதுப்பணித்துறை, நீர்வளத்துறை, பழங்குடியினர் நலத்துறை, பொது நூலகத்துறை ஆகிய துறைகளின் மூலம் 15.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட 33 முடிவுற்ற திட்டப்பணி களை திறந்து வைத்து,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பொதுப்பணித்துறை ஆகிய துறைகளின் மூலம் 33.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 421 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 4,195 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகள்,

வருவாய்த் துறையின் சார்பில் 1,328 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 69 பயனாளிகளுக்கு நிவாரண உதவித் தொகை, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள்,

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், 40 பயனாளிகளுக்கு தேய்ப்பு பெட்டிகள், கூட்டுறவுத் துறையின் சார்பில் 630 பயனாளிகளுக்கு கால்நடை பராமரிப்பு கடன், பயிர்கடன் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு கடனுதவிகள்,

மகளிர் திட்டத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 9,297 மகளிருக்கு வங்கிக் கடன் இணைப்புகள், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 20 விவசாயிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆழ்துளை கிணறு அமைத்தல், முதலமைச்சரின் சூரிய சக்தியில் இயங்கும் மின் மோட்டார் பம்பு செட் அமைத்தல் உள்ளிட்ட இயந்திரமயமாக்கல் நலத்திட்ட உதவிகள், வனத்துறையின் சார்பில் 24 பயனாளிகளுக்கு சுழல் நிதி கடனுதவிகள்,


மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 40 பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் 200 மீனவர்களுக்கு மீனவர் நலவாரிய அடையாள அட்டைகள், தாட்கோ திட்டத்தின் சார்பில் 20 பயனாளிகளுக்கு பழங்குடியினர் துரித மின் இணைப்புகள், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறையின் சார்பில் 200 நபர்களுக்கு முதலமைச்ச ரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்ட அடையாள அட்டைகள்,

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 6 பயனாளிகளுக்கு தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்ட மானிய உதவிகள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் 500 தொழிலாளர்களுக்கு புதிய பதிவு அட்டைகள், வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் 706 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள், வேளாண்மைத்துறையின் சார்பில் 26 பயனாளிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதற்கான உதவிகள், பால்வளத்துறையின் சார்பில் 11,187 பயனாளிகளுக்கு கூடுதல் ஊக்கத் தொகை காசோலைகள், சமூக நலத்துறையின் சார்பில் 75 பெண்குழந்தைகளுக்கு இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வைப்புத் தொகை ஆணைகள்,

பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் சார்பில் 11 பயனாளிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்ட மாதிரி வயல்கள் அமைக்க உதவிகள், முன்னோடி வங்கியின் சார்பில் 10 மாணவர்களுக்கு கல்விக் கடனுதவிகள், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 50 பயனாளிகளுக்கு நுண்ணீர் பாசனம் அமைப்பதற்காக உதவிகள் என மொத்தம் 28,639 பயனாளிகளுக்கு 254.59 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதீஸ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி இரா.கவிதா, தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர் மாவட்ட வருவாய் அலுவலர் வீ.இரவி, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) ஜெ.ரூபன் சங்கர் ராஜ் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---



# எல்லார்க்கும் எல்லாம் என்பதே திராவிட மாடல்!